RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# இராஜம் கிருஷ்ணனின் 'சேற்றில் மனிதர்கள்' என்னும் நாவலில் சமூகச் சிந்தனைகள்

மா.ஆ. சுகந்தி [அ] *

[அ] தமிழ்த்துறை, கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரி, திருச்செந்தூர் - 628215, தமிழ்நாடு, இந்தியா.

# Social Thoughts in Rajam Krishnan's Novel Setril Manithargal

M.A. Suganthi [a, *]

[a] Department of Tamil, Govindammal Aditanar College for Women, Tiruchendur – 628215, Tamil Nadu, India

*Corresponding Author:
suganthi1977222@gmail.com

Received: 09-12-2025
Revised: 17-02-2026
Accepted: 05-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**

Rajam Krishnan stands as a pioneering writer in modern Tamil literature, known for documenting social reality through rigorous field research. Her novel *Setril Manithargal* (People in the Mud) vividly portrays the lives of agricultural labourers in the muddy fields of the Thanjavur district, exposing the oppression, economic exploitation, and social injustices faced by marginalized communities and women under a feudal social structure. Through the character of Dr. Viswanathan, the narrative articulates a political awakening that challenges the enslaved mindset of the working class, emphasizing education, self-respect, and class consciousness as tools of liberation. The novel foregrounds feminist resistance through characters such as Gandhi, Lakshmi, and Panchami, highlighting women's role in social struggle. Set against the conflict between tradition and modernity, the text underscores the courage and hope of the new generation, ultimately advocating the uprising of the oppressed and the urgent need for social transformation grounded in humanistic communist ideals.

**Keywords:** Setril Manithargal, Social Thoughts, Feudalism, Class Consciousness, Feminism, Communism.

## முன்னுரை

இராஜம் கிருஷ்ணனின் சேற்றில் மனிதர்கள் நாவல், தஞ்சை மாவட்டத்தின் சேற்றுநிலங்களில் உழைக்கும் வேளாண் தொழிலாளர்களின் வாழ்வியலைக் கள ஆய்வு அடிப்படையில் தத்ரூபமாகச் சித்தரிக்கும் முக்கியச் சமூக நாவலாகத் திகழ்கிறது. கள அனுபவங்களையும் ஆய்வுப் பார்வையையும் இணைத்துப் படைப்புகளை உருவாக்கிய முன்னோடிகளில் இராஜம் கிருஷ்ணன் குறிப்பிடத்தக்கவர். இந்நாவல், நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பில் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்கள், சமூக அநீதி, சுரண்டல், அதற்கெதிரான அரசியல் விழிப்புணர்வு மற்றும் பெண்ணிய எழுச்சி ஆகியவற்றை ஒருங்கிணைந்த பார்வையில் வெளிப்படுத்துகிறது. குறிப்பாக, கம்யூனிசச் சிந்தனைகள் கிராமிய உழைப்பாளர் சமூகத்தில் ஏற்படுத்திய விழிப்புணர்வையும் மாற்றங்களையும் இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

## சமூகச் சூழல்

சேற்றில் மனிதர்கள் நாவலில் வரையறுக்கப்படும் சமூகச் சூழல், கடுமையான சாதி-வர்க்க ஏற்றத்தாழ்வுகளால் நிரம்பியுள்ளது. கீழ்சாதியினர் மேல் சாதியினரால் அடிமைப்படுத்தப்பட்டு வாழும் அமைப்பு வெளிப்படையாகப் பதிவாகிறது. உழைப்புக்குரிய கூலி மறுக்கப்படுவதும், நேர வரையறையின்றி அதிக நேரம் வேலை வாங்கப்படுவதும், வேலை இடத்தில் மனித மரியாதை மறுக்கப்படுவதும் ("ஓய்வு, நிமிர்வு, வெற்றிலை போடுதல் போன்ற இயல்பான செயல்களுக்கே தடை" ப.35) சமூக அநீதியின் உச்சமாக சித்தரிக்கப்படுகிறது.

மேலும், மதச் சடங்குகள் என்ற பெயரில் தாழ்த்தப்பட்ட மக்களின் குடிசைகளைக் காலிசெய்ய வற்புறுத்தும் நடைமுறைகள், அவர்களைத் தங்குமிடமற்றவர்களாக்கும் கொடுமைகளை வெளிப்படுத்துகின்றன.

ஆணாதிக்கம் வேரூன்றிய இச்சமூகத்தில் பெண்கள் இழிவாகப் பார்க்கப்படுகின்றனர். குறிப்பாக, வறுமையில் வாழும் பெண்களும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பெண்களும் மேல்சாதியினரின் ஆசைகளுக்கு இரையாக்கப்படுவது, பழிவாங்கும் மனநிலையின் ஒரு கருவியாகப் பாலியல் வன்முறை பயன்படுத்தப்படுவது போன்றவை சமூகத்தின் கொடூர முகத்தை வெளிக்கொணர்கின்றன.

இவ்வாறான சாதி, வர்க்க, மத மற்றும் பாலின அடிப்படையிலான சுரண்டல்களும் ஒடுக்குமுறைகளும், நில உடைமையாளர்களுக்கும் சேற்றுநிலங்களில் உழைக்கும் மக்களுக்கும் இடையிலான அதிகாரச் சுவர் எவ்வளவு கடுமையாக நிறுவப்பட்டு, சமூக அநீதியை நிரந்தரமாக்கும் அமைப்பாகச் செயல்படுகிறது என்பதை நாவல் தெளிவாக எடுத்துரைக்கிறது.

## அரசியல் விழிப்புணர்வு: டாக்டர் விசுவநாதனின் பங்கு

டாக்டர் விசுவநாதன், மருத்துவ சேவையைத் தாண்டி சமூக மாற்றத்தின் அரசியல் கருவியாக நாவலில் உருவகப்படுத்தப்படுகிறார். அவரது கம்யூனிசக் கொள்கைகளையும் அதன் தாக்கத்தையும் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்

## மனிதாபிமானம் கலந்த பொதுவுடைமை

டாக்டரின் கம்யூனிசம் வெறும் ஏட்டுச் சுரக்காய் அல்ல. உழைக்கும் மக்களைப் பாதிக்கும் நோய்களுக்கு கிருமிகள் மட்டுமல்ல; பசி, வறுமை, சுரண்டல் போன்ற சமூகக் காரணிகளும் அடிப்படை என்பதை அவர் ஆழமாக உணர்ந்தவர். இதனைச் செயல்பாடுகளில் வெளிப்படுத்தும் வகையில், ஏழை மக்களிடமிருந்து பணம் பெறாமல் மருத்துவ சேவை செய்து, தனது கொள்கையை வாழ்வியலாக்குகிறார்.

"நோயை மட்டும் குணப்படுத்துவது போதாது; அந்த நோய் உருவாகக் காரணமான அநீதியான சமூக அமைப்பையே மாற்ற வேண்டும்" (ப.42) என்ற உறுதியான சமூகப் பார்வையைக் கொண்டவராக டாக்டர் வரையறுக்கப்படுகிறார்.

## வர்க்க விழிப்புணர்வு

பழைய தலைமுறை மனிதர்களிடம், "இது எங்கள் விதி" என்ற எண்ணம் ஆழமாக இருக்கிறது. டாக்டர் அந்த எண்ணத்தை உடைக்கிறார். "உழைக்கிற உங்களுக்கு ஏன் உண்ண உணவில்லை?" (ப.45) என்ற அவரது கேள்வி, மக்கள் மனதில் வர்க்க விழிப்புணர்வை விதைக்கிறது. .அடிமைத்தனம் என்பது கடவுள் கொடுத்தது அல்ல, அது நிலப்பிரபுத்துவ அமைப்பால் உருவாக்கப்பட்டது என்பதைப் புரிய வைக்கிறார். படிப்பகங்கள், சங்கங்கள் அமைப்பதன் மூலம் உழைக்கும் மக்களை ஒன்றுதிரட்டி அரசியல்-பொருளாதார அறிவை வளர்க்கிறார்.

## கல்வி மற்றும் சுயமரியாதை

கல்வி என்பது வெறும் வேலைக்காக மட்டுமல்ல, அது ஒரு மனிதனுக்குத் தார்மீக பலத்தையும், தன் உரிமையைக் கேட்கும் துணிச்சலையும் தரும் என்று டாக்டர் விசுவநாதன் நம்புகிறார். கல்வியின் சிறப்பைத் திருவள்ளுவர், "கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு மாடல்ல மற்றை யவை" (குறள் 400) என்று வலியுறுத்துகிறார். எனவே, ஆண், பெண் அனைவருக்கும் கல்வி வேண்டும். கல்வி கற்றால் மட்டும் தான் உயர்வு கிடைக்கும்.

## சமூகப் போராளி: சம்முகம்

கிளியந்துறை சம்முகம், அடிமைத்தனத்தை எதிர்க்கும் விழிப்புணர்வு பெற்றவராகவும் தான் பட்ட அடியும் மிதியும் போதும் என்றும், அடுத்த தலைமுறை அடிமையாக இருக்கக்கூடாது என்பதிலும் தெளிவாக இருக்கிறார். கல்வி மீது நம்பிக்கைக்கொண்டு தன் வாழ்வில் பட்ட துன்பங்கள் தன் பிள்ளைகளுக்குத் தொடரக் கூடாது என்பதற்காக, வறுமையிலும் அவர்களைப் படிக்க வைக்கிறார்.

சம்முகம் தன் மகளை எண்ணி, "சேற்றில் உழன்று நாற்று நடும் பின்புலத்தில் இவள் ஒரு தாமரையாக மலரப் போகிறாள்" (ப.9) என்று கனவு காண்கிறார். படிப்பகம், விவசாயத் தொழிலாளர் சங்க செயல்பாடுகளில் ஈடுபட்டு இளைஞர்களை அரசியல் உணர்வுடன் வளர்க்கிறார்.

## பெண்களின் நிலை

வயலில் வேலை செய்யும் பெண்களை நிலப்பிரபுக்கள் நேரடியாகச் சுரண்டினார்கள். ஆனால், ஓரளவுக்குப் படித்த காந்தியை அந்த ஆடவன் நாகரிகமான முறையில் ஏமாற்றுகிறான். முன்னேறத் துடிக்கும் ஒரு பெண்ணின் கனவைப் பயன்படுத்திக்கொண்டு, அவளை ஊரைவிட்டே அழைத்துச் சென்று, இறுதியில் அவளைத் தவிக்கவிடுவது என்பது உடல் ரீதியான வன்முறையை விடக் கொடிய உளவியல் வன்முறை.

காந்தி, "வீட்டை விட்டு வந்ததுக்கு சரியான பாடம் கத்துக்கிட்டேன்" (ப.150) என்று புலம்புகிறாள். இது உளவியல் வன்முறையின் ஆழத்தை வெளிப்படுத்துகிறது. கல்விக்காகச் சென்ற இடத்தில் காந்தி ஏமாற்றப்படுகிறாள். கல்வியே அவளுக்குப் பொறியாக மாறியது.

## காந்தியின் மறுபிறப்பும் டாக்டரின் தைரியமும்

காந்தி தன்னை ஏமாற்றியவனிடமிருந்து தப்பித்துத் தஞ்சம் தேடி டாக்டரிடம் வருகிறாள். அதுதான் அவளது வாழ்வில் ஒரு மிகப்பெரிய மறுபிறப்பு. டாக்டர், காந்தியின் அச்சத்தைப் போக்கி தைரியத்தை ஊட்டுகிறார். டாக்டர் விசுவநாதன் காந்தியை பாதிக்கப்பட்ட பெண்ணாக மட்டும் பார்க்காமல், அவளை ஒரு போராளியாக மாற்றுகிறார். ஏமாற்றப்பட்டதால் ஏற்பட்ட அவமான உணர்ச்சியையும், தற்கொலை எண்ணத்தையும் அவளிடமிருந்து நீக்குகிறார். அவளுக்குப் படிப்பும் அறிவும் இருக்கிறது, எனவே, அவள் யாருக்கும் அஞ்சி வாழ வேண்டியதில்லை என்ற தார்மீகத் தைரியத்தை அளிக்கிறார். சமுதாயம் அவளைக் கைவிட்டாலும், அவளது அறிவாற்றல் அவளுக்கு ஒரு புது வாழ்வைத் தரும் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறார்.

## பெண்களின் போர்க்குணமும் புதிய நம்பிக்கையும்

காந்தியும் லட்சுமியும் இணைந்து பஞ்சமி என்ற பெண்ணிற்காகப் போராடுகின்றனர். பஞ்சமி என்ற இளம்பெண், நிலப்பிரபுத்துவ சக்திகளால் மிகக் கொடூரமான முறையில் கொல்லப்படுகிறாள். இது வெறும் தனிமனிதக் கொலை அல்ல; உழைக்கும் மக்கள் தங்கள் உரிமைக்காகவும், சுயமரியாதைக்காகவும் திரள்வதைக் கண்டு ஆத்திரமடைந்த ஆதிக்க சக்திகள், அந்த மக்களின் மன உறுதியைக் குலைப்பதற்காக நிகழ்த்திய ஒரு அச்சுறுத்தல் நடவடிக்கை.

லட்சுமி மற்றும் காந்தி, டாக்டர் விசுவநாதன் கூறியது போல் "சாணிப் புழுக்களாக மிதிபட்டுச் சாவதை விட, உரிமையைக் கேட்டுப் போராடிச் சாவதே மேல்" (ப.110) என்றும்,

“நிரபராதிகளை விடுதலை செய்

காவல் நிலையங்களைக் கற்பழிப்பு நிலையங்களாக்காதீர்

மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்” (ப.221) என்றும் பஞ்சமிக்காகப் போராடுவது, பெண்ணிய எழுச்சியின் உச்சமாகும்.

## புதிய தலைமுறையின் நம்பிக்கை

சம்முகம், ஆரம்பத்தில் தனது குடும்பத்தின் மீது ஆதிக்கம் செலுத்திய ஒரு தந்தைவழிச் சமூகத்தின் பிரதிநிதியாக இருந்தார். ஆனால், நாவலின் இறுதியில் சம்முகம் தனது மனைவி, மகளின் பின்னால் செல்லத் தயாராகும் தருணம், பழைய ஆணாதிக்க அகங்காரத்தின் வீழ்ச்சியையும் புதிய சமூக யதார்த்தத்தின் ஏற்றத்தையும் குறிக்கிறது.

டாக்டர் ஊட்டிய தைரியத்தால் காந்தி நிமிர்ந்து நிற்பதும், மகளுக்காகவும் பஞ்சமிக்காகவும் லட்சுமி துணிந்து களத்தில் இறங்குவதும் சம்முகத்திற்கு ஒரு புதிய பாடமாக இருக்கிறது. இதுவரை தான் அஞ்சி வந்த மிராசுதார்களையும் அதிகார வர்க்கத்தையும், தனது குடும்பப் பெண்கள் எந்தத் தயக்கமுமின்றி எதிர்கொள்வதைக் கண்டு அவர் வியந்து நிற்கிறார்.

சம்முகம் தன் மனைவி மற்றும் மகளின் பின்னால் செல்ல முற்படுவது, ஒரு தேக்கமடைந்த சமூகம் புதிய தலைமுறையின் நம்பிக்கையை நோக்கி நகர்வதற்கான சின்னமாக அமைகிறது.

## முடிவுரை

சேற்றில் மனிதர்கள் நாவல், பழமை-புதுமை மோதலின் பின்னணியில் ஒடுக்கப்பட்டவர்களின் எழுச்சி, வர்க்க விழிப்புணர்வு, பெண்ணிய உணர்வு மற்றும் சமூக மாற்றத்தின் அவசியத்தை வலுவாக முன்வைக்கிறது. காந்தி, லட்சுமி போன்ற பாத்திரங்கள், பெண்கள் எதிர்கொள்ளும் அநீதிகளுக்கெதிரான போராட்டத்தின் பிரதிநிதிகளாக நிற்கின்றனர். இந்நாவல் தமிழ்ச் சமூக நாவல் மரபில் சமூக அரசியல்-பெண்ணிய வாசிப்புக்கான முக்கிய ஆவணமாகக் கருதத்தக்கது.

## References

Thiruvalluvar, (2016) Thirukkural, New Century Book House, Chennai.

Rajam Krishnan, (1982) Setril Manithargal, Bharatiya Bhasha Parishad & Ilakkiya Sinthanai, Chennai.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License